செய்தி வெளியீடு எண்.178 நாள்.02.04.2017

## முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் இன்று 43,051 போலியோ சொட்டு மருந்து முகாம்களில் 5 வயதிற்குட்பட்ட 71 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு!

## போலியோ இல்லாத தமிழகம்! மாண்புமிகு அம்மாவின் அரசு சாதனை ! மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் பெருமிதம் !!

~~~~~~~~

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் மணலி புதுநகர் பி.சி. திருமண மண்டபத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (02.04.2017) போலியோ சொட்டு மருந்து வழங்கி முகாமை துவக்கி வைத்து கூறியதாவது

மாண்புமிகு அம்மாவின் அரசால் முற்கட்டமாக 43051 தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்கள் 02.04.2017 அன்று தமிழகம் முழுவதும் நடத்தப்படவுள்ளது. அதாவது, ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்களில் சொட்டு மருந்து வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இம்முகாம்களில் 71 இலட்சம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். 3000க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஈடுபடுத்தப்படும். சொட்டு மருந்து வழங்குவதில் எந்தவொரு குழந்தையும் விடுபடக் கூடாது என்ற உயரிய நோக்கில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நாளில் பயணிக்கும் குழந்தைகளின் வசதிக்காக முக்கிய பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்களில் 1652 பயண வழி மையங்கள் (கூசயளேவை டிடிவா) நிறுவப்பட்டு சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1000 நடமாடும் குழுக்கள் மூலமாக தொலை தூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

சொட்டு மருந்து வழங்கும் மையம் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும். 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கு முதல் தவணையாக 02.04.2017 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சொட்டு மருந்து கொடுக்கப்படும். தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி ஓரிரு நாட்களுக்கு முன் சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும். புதிதாக பிறந்த குழந்தைகளுக்கும் (சூநற டிடிசஉ) முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும். விடுபடும் குழந்தைகளைக் கண்டறிய சொட்டு மருந்து வழங்கப்படும் குழந்தைகளுக்கு இடது கை சுண்டு விரலில் மை வைக்கப்படுகிறது. முகாம் நாளன்று போலியோ சொட்டு மருந்து வழங்க தனியார் மருத்துவர்களும் மற்றும் மருத்துவமனைகளும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். புலம் பெயர்ந்து வாழும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் முகாம் நாளன்று போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும்.

மாண்புமிகு அம்மாவின் அரசால் எடுக்கப்பட்ட இந்த தீவிர முயற்சியை தொடர்ந்து தமிழ்நாடு போலியோஇல்லாத நிலையை அடைந்துள்ளது. இதை கௌரவிக்கும் விதமாக 19.08.2014 அன்று பெங்களூரில் நடந்த நிகழ்ச்சியில் உலக சுகாதார நிறுவனம் (WHO) தமிழக அரசிற்கு விருது வழங்கியது இங்கே நினைவு கூறத்தக்கது. இந்த நிலையை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவும், குழந்தைகளை போலியோ வைரஸ் பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும், அனைத்து தாய்மார்களும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பெஞ்சமின் அவர்கள், மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி. வேணுகோபால், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி. பலராமன், பொது சுகாதாரம் (ம) நோய் தடுப்புத் துறை இயக்குநர் டாக்டர் கே.குழந்தைசாமி, மருத்துவக்கல்வி இயக்குநர் (பொ) டாக்டர். நாராயணபாபு, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் டாக்டர் கே. செங்குட்டுவன், துணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள்) மரு.ஜே.பிரபாகரன், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~~~~